தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பயறு வகைகளுக்கு ஏற்ற ஆடிப் பட்டம்

தண்ணீர் குறைவாக தேவைப்படும், குறுகிய காலப் பயிர்களான துவரை, உளுந்து, பச்சைப் பயறு, காராமணி போன்ற பயறு வகைகளை சாகுபடி செய்யலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைப்பதுடன், நல்ல வருமானமும் கிடைக்கும். மேலும் மண் வளமும் பேணப்படும். ஆடிப் பட்டத்தில் தண்ணீர் தேவை குறைவான பயறு வகைகளை விளைவிப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதல் மகசூலும், வருமானமும் ஈட்ட முடியும். "ஆடிப் பட்டம் தேடி விதை" இது பழமொழி... ஆடிப் பட்டத்தில் நெல்தான் சாகுபடி செய்ய வேண்டும் என்பது இல்லை. குறைந்த அளவு தண்ணீர் தேவையுள்ள துவரை உள்ளிட்ட பயறு வகைகளையும் சாகுபடி செய்யலாம். இது குறித்து காஞ்சிபுரம் மாவட்ட உழவர் பயிற்சி மைய வேளாண் அலுவலர் சுரேஷ்குமார் கூறியது: தற்போது மழை பற்றாக்குறையால் பெரும்பாலான பாசன நிலங்களும், மானாவாரி நிலங்களும் சாகுபடி இல்லாமல் தரிசாக உள்ளன. இந்த நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வர (தண்ணீர் தேங்காத நிலங்களாக இருக்க வேண்டும்), தண்ணீர் குறைவாக தேவைப்படும், குறுகிய காலப் பயிர்களான துவரை, உளுந்து, பச்சைப் பயறு, காராமணி போன்ற பயறு வகைகளை சாகுபடி செய்யலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைப்பதுடன், நல்ல வருமானமும் கிடைக்கும். மேலும் மண் வளமும் பேணப்படும். இந்த ஆடிப் பட்டத்தில் துவரை பயறு சாகுபடி செய்வது குறித்த தகவல்களை காணலாம்.

**துவரை ரகங்கள்**: கோ-5, கோ-6, கோ (ஆர்.ஜி)-7, கோபிஎச்-2, விபிஎன்-2, ஏபிகே 1, வி.பி.என்-1, பிஎஸ்ஆர்-1

**விதையளவு:** கோ-6 ரக விதை ஒரு ஹெக்டேருக்கு 10 கிலோ பயன்படுத்தலாம். கோ (ஆர்.ஜி)-7, விபிஎன்-2, ஏபிகே 1, வி.பி.என்.-1 ரக விதைகள் ஒரு ஹெக்டேருக்கு 25 கிலோ பயன்படுத்தலாம்.

இடைவெளி: கோ-5, கோ(ஆர்.ஜி)7 - 45-க்கு 30 செ.மீ. இடைவெளி, விபிஎன்1,

ஏபிகே 1 - 45-க்கு 20 செ.மீ. இடைவெளி, விபிஎன் 2, கோ 6 - 90-க்கு 30 செ.மீ. இடைவெளி.

**விதை நேர்த்தி**: ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மாவிரிடி அல்லது சூடோமோனாஸ் ஃப்ளூரசன்ஸ் 1 கிலோ விதையுடன் கலந்து 1 நாளுக்கு பின்பு விதைப்புக்குப் பயன்படுத்தலாம்.

அல்லது 2 கிராம் கார்பன்டாஸிமை 1 கிலோ விதையுடன் கலந்து அரை மணி நேரத்துக்குப் பிறகு பயன்படுத்தலாம்.

**உயிர் உர நேர்த்தி:** ஒரு ஹெக்டேருக்கு 600 கிராம் ரைசோபியம், 600 கிராம் பால்போபேக்டீரியா, 400 மில்லி லிட்டர் அரிசி கஞ்சி கலந்து நிழலில் உலர்த்தி பின்பு விதைக்கலாம்.

**உரம்:** ஒரு ஹெக்டேருக்கு 12.5 மெ.டன் தொழு உரம் அல்லது 6.25 மெ.டன் தென்னை நார்க் கழிவு அல்லது 5 மெ.டன் கரும்பு ஆலைக் கழிவுகளைப் பயன்படுத்தலாம்.

**இறவை:** 25 கிலோ தழைச் சத்து அல்லது 55 கிலோ யூரியா, 50 கிலோ மணிச்சத்து அல்லது 313 கிலோ சூப்பர் பாஸ்பேட், 25 கிலோ சாம்பல் சத்து அல்லது 42 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்.

**நுண்ணூட்டச் சத்து**: 110 கிலோ ஜிப்சம், 12.5 சிங்க் சல்பேட்

**மானாவாரி**: 12.5 கிலோ தழைச்சத்து அல்லது 27 கிலோ யூரியா, 25 கிலோ மணிச்சத்து அல்லது 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 12.5 கிலோ சாம்பல் சத்து அல்லது 21 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்.

**நுண்ணூட்டச் சத்து**: 55 கிலோ ஜிப்சம், 12.5 சிங்க் சல்பேட்.

**களை நிர்வாகம்**: களை முளைக்கும் முன் 2 கிலோ பெண்டிமெத்திலின் அல்லது ஏக்கருக்கு 1.5 லிட்டர் ஃப்ளூ குளோரலினை விதைத்த 3-ஆவது நாள் போதுமான ஈரப்பதம் இருக்கும்போது 50 கிலோ மணலுடன் கலந்து தெளிக்கவும்.

**காய்த் துளைப்பானை கட்டுப்படுத்தும் முறைகள்**: காய்த் துளைப்பான் தாங்கி

வளரக் கூடிய ரகங்களான கோ (ஆர்.ஜி)-7, வி.பி.என்.-2, ஏபிகே-1, வி.பி.என்-1 சாகுபடி செய்யலாம்.

ஹெக்டேருக்கு 12 ஹெலிகோவெர்பா இனக் கவர்ச்சி பொறிகளை வைத்து பூச்சி நடமாட்டத்தைக் கண்காணிக்கலாம்.

மேலும் ஹெக்டேருக்கு 50 பறவைப் பந்தல் அமைத்து பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். அதேபோல் ஹெக்டேருக்கு 625 மி.லி. என்பி வைரல் ஹெலிகோவெர்பா தெளித்து காய் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.

பூப்பருவத்தில் 1 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் வேப்பங்கொட்டை சாறு தெளிக்க வேண்டும்.

1 லிட்டர் தண்ணீருக்கு 0.75 மி.லி. அல்லது 1 லிட்டருக்கு 2 மி.லி. எண்டோசல்பான் பயன்படுத்தலாம் என்றார் அவர்.

## <u>மேட்டூர் அணைக்கு 17,000 கன அடி நீர்வரத்து</u>

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் பருவ மழை பெய்ய தொடங்கியுள்ளதால், மேட்டூர் அணைக்கு வெள்ளிக்கிழமை நீர்வரத்து அதிகரித்தது. கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை குறைந்ததையடுத்து, அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளிலிருந்து உபரி நீர் திறந்துவிடுவது குறைக்கப்பட்டது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வியாழக்கிழமை நொடிக்கு 11,119 கன அடியாகக் குறைந்தது. இந்த நிலையயில், கர்நாடகத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் பருவ மழை பெய்ய தொடங்கியதால் கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், அங்கிருந்து உபரி நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணைக்கு வெள்ளிக்கிழமை காலை நீர்வரத்து நொடிக்கு 17,139 கன அடியாக அதிகரித்தது. அணையிலிருந்து பாசனத்துக்காக நொடிக்கு 12 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர்வரத்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 111.83 அடியாக உயர்ந்தது. அணையின் நீர் இருப்பு 81 டி.எம்.சி.யாக உள்ளது. ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரிப்பு:

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வெள்ளிக்கிழமை நொடிக்கு 18,000 கன அடியாக அதிகரித்தது. வியாழக்கிழமை நொடிக்கு 15,000 கன அடியாக இருந்த நீர்வரத்து வெள்ளிக்கிழமை நீர்வரத்து 18,000 கன அடியாக அதிகரித்தது. பிரதான அருவி, காவிரிக் கரையோரங்களில் சுற்றுலாப் பயணிகள் செல்லாத வகையில் காவல் துறை, தீயணைப்புத் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். நீர்வரத்து மேலும் அதிகரித்துள்ளதால், காவிரி ஆற்றில் பரிசல்களை இயக்க விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட வாய்ப்பில்லை எனத் தெரிகிறது.

**ஒகேனக்கல்லில் நீர்வரத்து 18,000 கன அடியாக அதிகரிப்பு**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வெள்ளிக்கிழமை மேலும் அதிகரித்து நொடிக்கு 18,000 கன அடியாக உள்ளது. ஒகேனக்கல் காவிரியாற்றில் படிப்படியாக நீர்வரத்து குறைந்த நிலையில், வியாழக்கிழமை நொடிக்கு 15,000 கன அடியாக அதிகரித்தது. இது மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை நீர்வரத்து நொடிக்கு 18,000 கன அடியாக உள்ளது. பிரதான அருவி, காவிரி கரையோரங்களில் சுற்றுலாப் பயணிகள் செல்லாத வகையில் காவல்துறை, தீயணைப்புத்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வருவாய்த்துறை அதிகாரிகள் மூலம் நீர்வரத்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இரண்டாவது நாளாக வெள்ளிக்கிழமை நீர்வரத்து மேலும் அதிகரித்துள்ளதால் பரிசல் இயக்க அனுமதிக்கப்பட வாய்ப்பில்லை என தெரிகிறது.

**நெல்லில் அதிக மகசூல் பெறும் விவசாயிகளுக்கு பரிசு அறிவிப்பு**

திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கடைபிடித்து நெல்லில் அதிக மகசூல் ஈட்டும் விவசாயிகளுக்கு ரூ.5 லட்சம் ரொக்கம், பதக்கம் பரிசளிக்கப் படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த பரிசை பெற சாகுபடியை உயர்த்த நாமக்கல் மாவட்ட விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூல் பெற்று மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும்

விவசாயியை ஊக்கப்படுத்தும் வையில் ரூ.5 லட்சம் பரிசும், ரூ.3500ம் மதிப்புள்ள பதக்கமும் குடியிரசு தின விழாவில் வழங்கப்பட உள்ளது. இந்த போட்டியில் பங்கேற்க 2015 மார்ச் 31ஆம் தேதி கடைசி நாளாகும். போட்டியில் பங்கேற்க குறைந்த பட்சம் 50 சென்ட் நிலம் அறுவடை செய்திருக்க வேண்டும், நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களும் கலந்து கொள்ளலாம், போட்டியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் ரூ.150ஐ பதிவுக் கட்டணமாக செலுத்த வேண்டும், குறைந்த பட்ச நெல் மகசூல் ஏக்கருக்கு 2500 கிலோ இருக்க வேண்டும், போட்டியில் கலந்து கொள்பவர் அறுவடை செய்யும் தேதியை 15 நாட்களுக்கு முன்பே சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநருக்கு நேரிலோ அல்லது பதிவு தபாலிலோ அனுப்பி அதற்கான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும், பதிவுக் கட்டணம் திருப்பி தரப்படமாட்டாது என்பன உள்ளிட்ட விதிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நாமக்கல் மாவட்டத்தில் தகுதியும், ஆர்மும் உள்ள விவசாயிகள் நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூல் பெற்று தமிழக அரசின் பரிசு, பத்தகத்தை பெற்றிட அருகே உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு பதிவு செய்திட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>ஆடிப்பட்டம்: மணிலா சாகுபடி தீவிரம்</u>

ஆடி மாதம் முடிவடைய உள்ள நிலையில் தற்போது மழை பெய்துள்ளதால் விவசாயிகள் மணிலா விதைப்புப் பணிகளில் தீவிரம் காட்டத் தொடங்கி யுள்ளனர். சித்திரைப் பட்டம், ஆடிப் பட்டம், மார்கழிப் பட்டம், கார்த்திகைப் பட்டம் என்று 4 பட்டங்களில் மணிலா விதைக்கப்படுகிறது. கொத்து மணிலா, கொடி மணிலா என்ற இரண்டு வகையான மணிலாக்கள்தான் விவசாயிகளால் பயிர் செய்யப்படுகின்றன. இதில் கொத்து மணிலா மட்டும்தான் பரவலாக பயிரிடப்படுகிறது. கொடி மணிலா திருவண்ணாமலை மாவட்டங்களில் மட்டும் ஆங்காங்கே பயிரிடப்படுகிறது. மணிலாவை பொறுத்தவரை ஆடிப்பட்டம் என்பது மிகவும் முக்கியமானது. தற்போது ஆடிப்பட்டம் முடிவும் தருவாயில், மழை பெய்துள்ளதால் மணிலா விதைப்பில் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். விழுப்புரம், திண்டிவனம், வானூர், உளுந்தூர்பேட்டை வட்டங்களின் பல்வேறு மணிலா பரவலாக விதைக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே நிலங்களை உழுது வைத்திருந்த விவசாயிகளுக்கு தற்போது மழை

பெய்ததால் நிலத்தில் ஈரம் உள்ளது. அந்த விவசாயிகள் மணிலா விதைப்புப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்: அமைச்சர் அம்பரீஷ்

கர்நாடகத்தில் கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு பாடுபடும் என்று, அந்த மாநில வீட்டு வசதித் துறை அமைச்சருமான அம்பரீஷ் தெரிவித்தார். மண்டியாவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சுதந்திர தின விழாவில், தேசியக் கொடியை ஏற்றிவைத்து அவர் பேசியது:

உடையார்களின் ஆட்சிக் காலத்தில் மண்டியா மாவட்டம் உள்ளடக்கிய மைசூர் மாகாணம் அபார வளர்ச்சி அடைந்தது. மண்டியா மாவட்டம் தோன்றி 60 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதை வைர விழாவாக நவம்பரில் கொண்டாடப்படும். அப்போது, நால்வடிகிருஷ்ணராஜ உடையாரின் சிலை நிறுவப்படும். மண்டியா மாவட்டத்தில் விவசாயம் முக்கியத் தொழிலாகும். சர்க்கரை ஆலைகள் பாக்கிபணத்தை அளிக்காததால் கரும்பு விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். விவசாயிகளின் துயர்துடைக்க அரசு தொடர்ந்து பாடுபடும். கரும்பு விவசாயிகள் விளைவிக்கும் கரும்புக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதே அரசின் விருப்பம். கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை சர்க்கரை ஆலைகள் விரைந்து வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை வழங்காத ஆலைகள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என்றார் அவர். விழாவில் பள்ளி,கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## முட்டை விலை 5 காசு குறைப்பு

நாமக்கல்: நாமக்கல்லில் முட்டைக்கு விலை நிர்ணயம் செய்யும் குழு கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 5 காசு குறைக்கப்பட்டது. ஒரு முட்டையின் விலை 270 காசாக என்இசிசி நிர்ணயம் செய்தது. இதே விலைக்கே கோழிப்பண்ணையாளர்கள் வியாபாரிகளுக்கு முட்டையை விற்பனை செய்யவேண்டும் என கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. ஐதராபாத் மண்டலத்தில் முட்டை விலை குறைந்து வருவதால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது. முட்டைக்கோழி ஒரு கிலோ ரூ 47 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.81

ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை: பெங்களூர் 290 காசு, மைசூர் 290, ஐதராபாத் 277, விஜயவாடா 285, மும்பை 317, கொல்கத்தா 338, டெல்லி 298 காசுகளாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

**சம்பா சாகுபடிக்காக நீமாயனூர் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் திறப்பு 20,662 ஏக்கர் பயன்**

கிருஷ்ணராயபுரம், : மாயனூர் புதிய கட்டளை மேட்டு வாய்க்காலிருந்து பாசனத்திற்கு தண்ணீரை கலெக்டர் ஜெயந்தி எம்எல்ஏக்கள் காமராஜ், பாப்பாசுந்தரம் ஆகியோர் திறந்து வைத்தனர். கரூர் மாவட்டம் மாயனூர் காவிரி ஆறு கரையிலிருந்து புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் செல்கிறது. மாயனூரிலிருந்து, திருக்காம்புலியூர், மேட்டுமகாதானபுரம், குளித்தலை வழியாக திருச்சி தாயனூர் வரை சென்று அடைகிறது. இந்த வாய்க்கால் மூலம் திருச்சி மற்றும் தஞ்சை மாவட்டங்களில் மொத்தம் 20 ஆயிரத்து 662 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்நிலையில் கர்நாடகா மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில் அதிகளவு மழை பெய்ததால் அங்கிருந்து உபரி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து. அணையின் நீர் மட்டம் 100 அடியை தொட்டதை அடுத்து சம்பா சாகுபடிக்காக 15ம்தேதி திறக்கப்படுவதாக அரசு அறிவித்து, அதற்கு முன்பாகவே 10ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது. அணையிலிருந்து வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதனையடுத்து திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் பாசன வசதி பெறும் வகையில் நடப்பாண்டிற்கு நேற்று 15ம்தேதி புதிய கட்டளை மேட்டு வாய்க்காலில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி நேற்று விசேஷ பூஜைகள் நடத்தப்பட்டது. பின்னர் பாசனத்திற்கு புதிய கட்டளை மேட்டு வாய்க்காலில் கரூர் கலெக்டர் ஜெயந்தி, கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ காமராஜ், குளித்தலை எம்எல்ஏ பாப்பாசுந்தரம் ஆகியோர் மதகுகளை திருகி திறந்து வைத்து மலர் தூவினர். நிகழ்ச்சியில் கரூர் டிஆர்ஒ அருணா, கிருஷ்ணராயபுரம் ஒன்றிய குழு தலைவர் முத்துசாமி, செயற்பொறியாளர் கலைச்செல்வன், உதவி செயற்பொறியாளர் பொதுப் பணிதிலகம், உதவி பொறியாளர் அறிவொளி

உட்படபலர்கலந்துகொண்டனர்.

**<u>தக்காளி வரத்து அதிகரிப்பு ஒரு கிலோ ரூ.25க்கு விற்பனை</u>**

சேலம்: சேலம் மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து அதிகரித்து வருவதால் அதன் விலை குறைந்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் மேச்சேரி, தலைவாசல், ஆத்தூர், மல்லூர் உள்ளிட்ட பகுதிகளிலும், தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, மாரண்டஹள்ளி, காரிமங்கலம் உள்ளிட்ட பகுதிகளிலும், கிருஷ்ணகிரியில் ராயக்கோட்டை, பர்கூர் உள்ளிட்ட பகுதிகளில் தக்காளி அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு பின் அதிகளவில் சேலம் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகிறது. தற்போது வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்து வருகிறது. இது குறித்து சேலம் வியாபாரிகள் கூறுகையில், கடந்த ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் தமிழகம் முழுவதும் தக்காளி அமோக விளைச்சலை தந்தது. வரத்து அதிகரிப்பால் விலை சரிந்து கிலோ ரூ.5 முதல் ரூ.10 என விற்றோம். அதன்பின் வரத்து குறைந்து, விலை அதிகரித்தது. கடந்த மாதம் கிலோ ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது வரத்து அதிகரிப்பால் ஒரு கிலோ தக்காளி ரூ.25 முதல் ரூ.30 என விற்கப்படுகிறது. சிறிய தக்காளி ஒரு கிலோ ரூ.20 என விற்பனை செய்யப்படுகிறது’ என்றனர்.

**<u>விதைப்புக்கு முன் விதையின் தரத்தை அறிவது அவசியம் இணை இயக்குனர் தகவல்</u>**

கரூர், : விதைப்புக்கு முன் விதையின் தரத்தை அறிந்து கொள்வது அவசியம் என விதைச்சான்று இணை இயக்குனர் தெரிவித்தார். தமிழ்நாடு விதைசான்று, அங்கக சான்று துறை யின்கீழ் செயல்படும் கரூர் திண்ணப்பாநகரில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தை கோவை விதைசான்று இணை இயக்குனர் பழனிசாமி ஆய்வு செய்தார். தொடர்ந்து கரூர் விதை பரிசோதனை நிலையத் தின் விதை மாதிரி வகைகள் வாரியாக இலக்கு, சாதனை விபரம், ஆய்வகத்தின் விதை மாதிரி ஆய்வு செய்யப்படும் முறை, பதிவேடுகளை ஆய்வு செய்தார். ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் உடனுக்குடன் மாதிரிகள் கொடுத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதை ஆய்வு செய்தார். தற்போதுவரை இந்த ஆய்வகம் இலக்கில் 80சதவீதம் விதைமாதிரிகள் இலக்கு சாதனை அடைந்துள்ளது. காப்பு மாதிரிகள் இருப்பு அறையை பார்வையிட்டார். ஆய்வின்போது இணை இயக்குனர் கூறியது- கரூர் மாவட்ட விவசாயிகள் தங்கள் வசம் உள்ள விதைப்புக்காக வைத்துள்ள விதைகளின் தரத்தை விதைப்புக்கு முன்னரே

தெரிந்துகொள்வது அவசியம். தங்களிடம் உள்ள விதைக்குவியலில் இருந்து சுமார் 150கிராம் விதை மாதிரி எடுத்து ஒரு பையில் இட்டு அத்துடன் துண்டு சீட்டில் பயிர், ரகம், குவியல்எண், ஆகிய விபரங்களை எழுதி வைத்து அதனுடன் தங்களது தெளி வான அஞ்சல் முகவரியுடன் கூடிய முகப்பு கடிதத்தையும், வைத்து ஒரு விதை மாதிரிக்கு ஆய்வுக்கட்டணமாக ரூ.30, வேளாண்மை அலுவலர் விதைபரிசோதனை நிலையம், 2வது குறுக்குத்தெரு காந்திகிராமம் கரூர்-4, என்ற முகவரியில் ஒப்படைத்து ஆய்வு முடிவினை பெற்று பயனடை யலாம் என்றார். ஆய்வின்போது, திருச்சி விதைபரிசோதனை அலு வலர் ரவி, கரூர் விதை ஆய்வு துணைஇயக்குனர் ரமேஷ் பாபு, கரூர்விதை சான்று உதவி இயக்குனர் கைலாசபதி, கரூர் விதைபரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் தாகூர் உடன் இருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நூற்றாண்டை கொண்டாடும் பனாமா கால்வாய்</u>**

பனாமா சிட்டி: வடக்கு - தெற்கு அமெரிக்கா இடையே உருவாக்கப்பட்டுள்ள பனாமா கால்வாய் நூறாண்டை நிறைவு செய்துள்ளது. கடந்த 1914ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதி இந்த கால்வாய் வர்த்தக பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டது. நூற்றாண்டு விழாவையொட்டி, பனாமா சிட்டியில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

**<u>'கொங்கின் பெருமை' காங்கயம் காளைகள்!</u>**

தமிழகத்தில் மாடுகள் என்றதுமே காளைகளும், ஜல்லிக்கட்டும் தான் நினைவுக்கு வரும். இந்தியாவில், 60க்கும் மேற்பட்ட வகையான மாடுகள் உள்ளது. அவற்றில், 'நாட்டு மாடு' என்று கூறப்படும் மாடுகள் தான் பல ஆண்டுகளுக்கு முன், நம் தமிழகத்தில் பயன்பாட்டில் இருந்தன. இந்த நாட்டு மாடுகளில் காளையை உழவு ஓட்டுவதற்கு, கட்டை வண்டியில் பயணம் செல்வதற்கு உள்பட பல்வேறு வகைகளில் அவற்றை பயன்படுத்தினர்.கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட தொழில்நுட்ப புரட்சியின் போது பல்வேறு

வேலைகளை மிகவும் எளிமையாகவும், கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அப்போது, விவசாயத்திற்கு நிலங்களை உழுவதற்காக 'டிராக்டர்' கண்டு பிடிக்கப்பட்டது. அதனால், காளைகளின் தேவை குறைந்து அவற்றின் பயன்பாடும் குறைந்தது. தொடர்ந்து, பாலின் தேவை அதிகரித்தது. நாட்டு மாடுகளால் அதிகளவிலான பால் கொடுக்க முடியாததால், மக்கள் மாற்று ஏற்பாடாக மற்ற நாடு மற்றும் மாநிலங்களை சேர்ந்த மாடு வகைகளை வளர்க்க தொடங்கினர். இதன், விளைவாக ஐந்து லட்சம் நாட்டு மாட்டுகள் இருந்த தமிழகத்தில், தற்போது ஐந்தாயிரத்திற்கும் குறைவான நாட்டு மாடுகளே உள்ளன. இச்சூழலில், தொண்டாமுத்தூரை சேர்ந்த முத்து முருகன் ஒரு காங்கேயம் பொலிக்காளையும், இரண்டு காடெரி மாடுகளையும் மூன்று ஆண்டுகளாக வளர்த்து வருகிறார். மேலும், கோவை உட்பட பல்வேறு பகுதிகளில் காளைகளை வளர்க்ககோரி நடைப்பயணம் மேற்கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அதன் விளைவாக, தற்போது வெள்ளக்கோவில் பகுதியில் உள்ள 40க்கும் மேற்பட்டோர் தங்களின் வீடுகளில் நாட்டு மாடுகளை வளர்க்கின்றனர். இது தவிர, கோவை மாவட்டத்திலும் மக்கள் நாட்டு மாடுகளை வளர்க்க வேண்டும் என்ற முனைப்போடு செயல்பட்டு வருகிறார்.

முத்து முருகன் கூறுகையில், "நாம் தற்போது முக்கிய எரிவாயுவாக பயன்படுத்திக்கொண்டிருக்கும் பெட்ரோல் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்பது தெரியாது. ஆனால், அவை இல்லாதபோது அதற்கான மாற்று எரிவாயு தேடும்போது 'பையோ காஸ்' மற்றும் 'கோபார் காஸ்' இருக்கிறது. இந்நிலை யில், அவற்றை மீட்டெடுப்பதற்கான முயற்சி தற்போது எடுக்காவிட்டால், 50ஆண்டுகளுக்கு பிறகு இம்மாடுகளை மீட்டெடுக்க முடியாது. இக்காளைகளை மீட்டெடுப்பதற்கான காரணம் இயற்கை விவசாயத்தை காப்பாற்றி, மறைந்த வரலாற்றையும், பண்பாட்டையும் மீட்டெடுக்க வேண்டும் என்பது தான்," என்றார்.-நமது நிருபர்-

## <u>மதுரையில் நெல், குதிரைவாலியில் ஆராய்ச்சி</u>

மதுரை:மதுரை விவசாயக் கல்லூரி பயிர் இனப்பெருக்கத் துறையின் கீழ் நெல், குதிரைவாலியில் ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன.தோட்டக்கலை பயிர்களில் மதுரை 1 ரக கத்தரி, புடலை, பச்சைமிளகாய், பாகல், சாமந்தி, செவ்வந்தி ரகங்கள், சிப்பிக்காளான் இரண்டு ரகம், கொழிஞ்சி மற்றும் உளுந்தில் ஒரு ரகம்

வெளியிடப்பட்டுள்ளன. அரிசியில் 'மதுரை 1 முதல் 5 ரகங்கள்' உருவாக்கப் பட்டுள்ளன. மதுரை 5 ரகம் 1996ல் கண்டறியப்பட்டது. தற்போது அந்த ரகத்தில் மேலும் ஆய்வுகள் செய்யப்பட்டு வருகிறது.டீன் சின்னுசாமி, துறைத் தலைவர் வன்னியராஜன், பேராசிரியர் முருகன் கூறியதாவது:விவசாயக் கல்லூரியில் ஆராய்ச்சி வெற்றிகரமாக முடிந்தபின், பல்வேறு இடங்களில் விவசாயிகளின் நிலத்தில் ஆய்வுக்கான ஆராய்ச்சிகள் நடைபெறும். தற்போது 'ஏசிஎம் 01010' என்ற பெயரில், இரண்டாவது ஆண்டாக விவசாயிகளின் நிலத்தில் புதிய நெல் வளர்க்கப்படுகிறது. மதுரை 5 ரகத்துடன் ஒப்பிடும் போது, எக்டேருக்கு 6 டன் கிடைப்பதுடன், 105 முதல் 110 நாட்களில் அறுவடைக்குத் தயாராகிறது. நடுத்தர சன்னரகமாகவும் உள்ளது. குறைந்தளவு தண்ணீரில் விளைச்சல் கிடைப்பதுடன், சாயாத தன்மையுடையதாக உள்ளது. 2009ல் கோவையில் கண்டுபிடிக்கப்பட்ட கோ 2 குதிரைவாலி ரகம் தான், தற்போது வரை பயன்பாட்டில் உள்ளது. இதை விட குறைந்தநாட்களில் அதிக விளைச்சல் பெறும் வகையில், மதுரையில் குதிரைவாலி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோம். தென்மாவட்டங்களுக்கு மட்டுமான இந்த பயிர் 'ஏசிஎம் 10145', கரிசல்மண்ணில் நன்றாக வளரும். மானாவாரியில் 95 நாட்களில் கோ 2 ரகத்தை விட 10 சதவீத விளைச்சல் கூடுதலாக, அதாவது எக்டேருக்கு ஒரு டன் வரை கிடைக்கும். பாசனப் பகுதியில் இரண்டு டன் உற்பத்தி கிடைக்கிறது. விவசாயிகளின் வயலில் ஆராய்ச்சி முடிவுகள் சாதகமாக அமைந்துள்ளன. அடுத்தாண்டில் நெல் மற்றும் குதிரைவாலியில் புதிய ரகங்கள் வெளியிடப்படும், என்றனர்.

## துவரம் பருப்பு வரத்து சரிவால்குவிண்டாலுக்கு ரூ.600 உயர்வு

சேலம்: வடமாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும், துவரை, துவரம் பருப்பின் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளதால், ஒரே மாதத்தில் குவிண்டாலுக்கு, 600 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.தமிழகத்துக்கு தேவையான, துவரை, துவரம் பருப்பு, மஹாராஷ்டிரா, குஜராத், பீஹார் உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்தே விற்பனைக்கு வருகிறது. சென்னை, சேலம் லீபஜார், விருதுநகர் ஆகிய மார்க்கெட்டுக்களுக்கு ஜூலை மூன்றாவது வாரம் வரை, 200 லாரிகளில் துவரம் பருப்பும், 100 லாரிகளில் துவரையும் விற்பனைக்கு வந்து கொண்டு இருந்தது.ஜூலை கடைசி வாரத்தில், 50 லாரிகளாக சரிந்தது. வரத்து சரிவால், பெரிய வியாபாரிகள், துவரை மில்

உரிமையாளர்கள், துவரம் பருப்பை அதிக அளவில் பதுக்கினர். மார்க்கெட்டில் துவரை, துவரம் பருப்புக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.ஜுலை, 31ம் தேதி, மொத்த விலையில், குவிண்டாலுக்கு, 300 ரூபாயும், சில்லரை விலையில் கிலோவுக்கு, நான்கு ரூபாயும் அதிகரித்தது. முதல் ரக துவரம் பருப்பு குவிண்டால், 7,700 ரூபாய்க்கு விற்றது, 8,000 ரூபாயாகவும், இரண்வது ரகம், 7,400 ரூபாய்க்கு விற்றது, 7,700 ரூபாயாகவும், மூன்றாம் ரகம், 7,200 ரூபாய்க்கு விற்றது,7,500 ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டது.வரத்து சரிவால், இந்த விலை, நேற்று மேலும், 300 ரூபாயும், சில்லரை விலையில் கிலோவுக்கு, நான்கு ரூபாயும் அதிகரித்தது.நேற்று முதல் ரகம் குவிண்டால், 8,300 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 8,000 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம், 7,800 ரூபாய்க்கும் விற்றது. சில்லரை விலையில், முதல் ரகம் கிலோ, 86 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 84 ரூபாய்க்கும், மூன்றாம் ரகம், 81 ரூபாய்க்கும் விற்பனையானது.

## மரவள்ளிப் பயிரில் மாவுப்பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை

நாமக்கல்: "மரவள்ளிப்பயிரில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளதால், தடுப்பு முறைகளை கையாண்டு கட்டுப்படுத்த வேண்டும்' என, நாமக்கல் தோட்டக்கலை துணை இயக்குனர் (பொறுப்பு) மணிவண்ணன் தெரிவித்து உள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நாமக்கல் மாவட்டத்தில், அனைத்து வட்டாரங்களிலும் மரவள்ளிப் பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மரவள்ளிப் பயிரில் சில பகுதிகளில் ஆங்காங்கே மாவுப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. மாவுப்பூச்சித் தாக்குதல் தென்பட்ட உடன் அருகில் உள்ள லத்துவாடி வேளாண் அறிவியல் நிலையம் அல்லது சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் பதிவு செய்து மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு, 50 எண்கள் ஒட்டுண்ணிகள் என்ற விகிதத்தில் விட்டு கட்டுப்படுத்த வேண்டும்.ஒட்டுண்ணிகள் கிடைக்காத பட்சத்தில், ஒரு லிட்டர் தண்ணீருக்கு, இரண்டு மி.லி., ரோகார், ஒரு மி.லி அசாடிராக்டின் என்ற விகிதத்தில் ஒட்டும் திரவத்துடன் கைத்தெளிப்பான் மூலம் செடிகளின் இலைகள், அடித்தண்டு ஆகியவை நன்கு படும்படி தெளிக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து, ஒரு லிட்டர் தண்ணீருக்கு, மூன்று மி.லி., புரபனோபாஸ் வீதம், ஒட்டும் திரவத்துடன் சேர்த்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். இந்த தடுப்பு முறைகளை கையாண்டால் மரவள்ளிப்பயிரை தாக்கிய மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சம்பா சாகுபடி முனைப்பு இயக்கம்

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் தாலுகாவைச் சேர்ந்த திருவாசி, கிளியநல்லூர் கிராமங்களில், சம்பா சாகுபடி முனைப்பு இயக்கம் நடந்தது.தமிழக முதல்வர் உத்தரவுப்படி, சம்பா சாகுபடி பாசனத்துக்காக, மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, மண்ணச்சநல்லூர் தாலுகாவில் உள்ள, 18 டெல்டா கிராமங் களிலும் ஆகஸ்ட், 11ம் தேதி முதல், 22ம் தேதி வரை சம்பா முனைப்பு இயக்கம் நடக்கிறது. திருவாசி, கிளியநல்லூர் வடக்கு கிராமத்தில் நடந்த சம்பா முனைப்பு இயக்க முகாமில், சம்பா சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்ப உத்திகளும், சம்பா பயிரில் அதிக மகசூல் பெறுவதற் காக, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை கடைபிடிக்கவும் ஆலோசனை வழங்கப்பட்டது. விதை தேர்வு, விதை நேர்த்தி செய்தல், நாற்றாங்கால் பராமரிப்பு மற்றும் நடவு வயல் தொழில்நுட்பங்கள் போன்றவை எடுத்து கூறப்பட்டது.சம்பா சாகுபடிக்கு, மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில், போதுமான அளவு விதைநெல் ரகங்களான வெள்ளை பொன்னி, பி.பி.டி., 5204, கோ 43 போன்ற நெல் ரகங்கள் மற்றும் உயிர் உரங்கள் இருப்பு வைத்து மான்ய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அனைத்து டெல்டா பாசன பகுதி விவசாயிகளும், அந்தந்த பகுதி வேளாண்மை உதவி அலுவலரை அணுகி, மான்ய விலையில் நெல் விதைகளை பெற்று பயன்பெறுமாறு மண்ணச்சநல்லார் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

## புதுக்கட்டளை வாய்க்கால் பாசனத்துக்கு நீர் திறப்பு

கரூர் :திருச்சி, தஞ்சை மாவட்டத்தில், 20 ஆயிரத்து, 662 ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில், நேற்று, மாயனூர் புதுக்கட்டளை வாய்க்காலில், பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.கரூர் மாவட்டம், மாயனூரில், 1927ல் அமைக்கப்பட்ட கட்டளை மூலம், நான்கு வாய்க்கால்களில் பாசனம் செய்யப்படுகிறது. 254 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டளை அருகே, 1.05 டி.எம்.ஸி., நீர் தேக்கும் வகையில் தடுப்பணை கட்டப்பட்டு உள்ளது. தடுப்பணையின் மூலம் கட்டளைமேட்டு வாய்க்கால், நங்கம் வாய்க்கால், தென்கரை வாய்க்கால், கிருஷ்ணராயபுரம் வாய்க்கால்களில், 60 ஆயிரம் ஏக்கர்

வரை பாசன வசதி பெறுகின்றன.புதுக்கட்டளை மேட்டுவாய்க்கால் மூலம் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில், 20 ஆயிரத்து, 662 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. வாய்க்காலில் தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. கலெக்டர் ஜெயந்தி, வாய்க்காலில் தண்ணீர் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில், எம்.எல்.ஏ.,கள் காமராஜ், பாபாசுந்தரம், டி.ஆர்.ஓ., அருணா, ஆற்றுப்பாதுகாப்பு கோட்ட செயற்பொறியாளர் கலைச்செல்வன், உதவி செயற்பொறியாளர் பொதுப்பணி திலகம், இளம் பொறியாளர் அறிவொளி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**<u>கால்நடைகளுக்கு செப்., 1ல் தடுப்பூசி முகாம்</u>**

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில், செப்டம்பர், 1ம் தேதி முதல், 21ம் தேதி வரை கால்நடைகளுக்கான தடுப்பூசி முகாம் நடக்கிறது.கால்நடைத்துறை வெளியிட்ட அறிக்கை:கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயை கட்டுப்படுத்தும் விதமாக, தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், ஆண்டுதோறும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.தஞ்சை மாவட்டத்தில், கால்நடைகளுக்கான, 7வது சுற்று தடுப்பூசி முகாம் செப்டம்பர், 1ம் தேதி துவங்கி, 21ம் தேதி முடிய நடக்கிறது. விவசாயிகள் மற்றும் கால்நடைகள் வளர்ப்பவர்கள், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடவேண்டும். முகாம் நடைபெறும் இடம், தேதி அந்தந்த பகுதிகளில் உள்ள கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் மூலம் வெளியிடப்படும்.

**<u>தேனியில் வாழை சாகுபடியில் விவசாயிகள்.. மானியம் வழங்கும் பரப்பு அதிகரிக்கப்படுமா</u>**

கம்பம்;வாழைக்கு தோட்டக்கலைத்துறை வழங்கி வரும் மானிய பரப்பை அதிகரிக்க வேண்டும் என்ற வாழை விவசாயிகளின் ஏக்கம் நிறைவேறுவது எப்போது என்று விவசாயிகள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.தேனி தோட்டக்கலை மாவட்டமாக விளங்குகிறது. வாழை, திராட்சை, தென்னை, கொய்யா, மா என பல தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்படு கின்றன.தற்போது தென்னையில் இருந்து திராட்சை, திராட்சையில் இருந்து வாழை என விவசாயிகள் தாவத் துவங்கியுள்ளனர். ஆனால் வாழைக்கு அரசு

குறைந்த பரப்பிற்கு மட்டும் மானியம் வழங்கப்படுகிறது.மானியம் வழங்கும் இலக்கை தோட்டக்கலைத்துறை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாழை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழக அரசு தற்போது 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம், விதை, மருந்து, உரம் போன்றவைகளை இலவசமாக வழங்குகிறது.தேனி மாவட்டத்தில் உள்ள 8 தோட்டக்கலை "பிளாக்கு'களிலும், வாழை மட்டும் குறைந்தது 10 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது. ஆயிரக்கணக்கான விவசாயிகள் வாழை சாகுபடியில் ஈடுபடுகின்றனர். சமீபத்தில் காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி பகுதிகளில் உள்ள திராட்சை விவசாயிகள், வாழை சாகுபடியை துவக்கியுள்ளனர். ஆனால் தோட்டக்கலைத்துறை சார்பில் வாழை சாகுபடி செய்யும் பரப்பிற்கு வழங்கும் மானியம் மிக குறைவானதாக உள்ளது. 2013-14 க்கு தேனி மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உதவி இயக்குநருக்கும் 10 முதல் 20 ஏக்கருக்கு மட்டுமே வாழைக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள 8 பிளாக்குகளுக்கும் சேர்த்து அதிகபட்சமாக 150 முதல் 200 ஏக்கர் மட்டுமே மானியம் வழங்கப்பட்டுள்ளது.10 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படும் வாழை பயிருக்கு, வெறும் 200 ஏக்கருக்கு மானியம் வழங்குவது விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு விவசாயிகளுக்கு மானியம் குறைவாக வழங்கினால், எப்படி வாழை சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும் முடியும்? என்று கேள்வி எழுப்பியுள்ளனர். வாழை சாகுபடி அதிகமாக மேற்கொள்ளப்படும் தேனி மாவட்டத்திற்கு, மானியம் வழங்கும் பரப்பின் இலக்கை அதிகரிக்க தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் முயற்சி செய்ய வேண்டும்.

**<u>"நெற்களஞ்சியத்தில்' துவங்கியது உழவுப்பணி மேலும் கைகொடுக்குமா மழை</u>**

ஆர்.எஸ்.மங்கலம்;மாவட்டத்தில் சில நாட்களாக பெய்யும் சாரல் மழை விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது. இதனால் "மாவட்டத்தின் நெற்களஞ்சியம்' என அழைக்கப்படும் திருவாடானை பகுதிகளில் உழவுப் பணிகள் துவங்கி உள்ளன. திருவாடானை தாலுகா ஆர்.எஸ்.மங்கலம், ஆனந்தூர், சோழந்தூர், திருவாடானை, தொண்டி, மங்களக்குடி, புல்லூர் பகுதிகளில் 42 ஆயிரத்து 500 எக்டேரில் நெல் விவசாயம் செய்யப்பட்டு வந்தது. பருவ மழை பொய்த்ததால், இரண்டு ஆண்டுகளாக விவசாயம் பாதித்தது. சில

நாட்களுக்கு முன் பெய்த மழை விவசாயிகளுக்கு நம்பிக்கையை கொடுத்து உள்ளது. இதனால் உழவுப் பணியை விவசாயிகள் துவக்கி வருகின்றனர். தற்போது மாவட்டத்தில் சாரல் மழை பெய்து வருகிறது. நேற்றும் ராமநாதபுரம், ஆர்.எஸ்.மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது. இது விவசாயிகளுக்கு மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.இதுகுறித்து சனவேலி விவசாயி வீரமணி கூறியதாவது:இப்பகுதியில் நேரடி நெல் விதைப்பு செய்ய வேண்டும். இதனால் நிலத்தை மூன்று முதல் ஐந்து முறை உழுது தயார் செய்ய வேண்டும். பிறகுதான், விதைப்பு செய்ய முடியும். ஆனால் உழவு செய்வதற்கு ஈரப்பதம் இன்றி முதல் கட்ட உழவுசெய்த நிலையில் நிலங்கள் உள்ளன. ஆடிப்பட்டம் தேடி விதைக்கவும் முடியவில்லை. காலம் கடந்து விதைப்பதால் நெல்பயிருக்கு ஏற்ற கால நிலை மாறி பூச்சிகள் தாக்கி மகசூல் குறைந்து விடும். காலம் கடந்து தற்போது பெய்யும் மழை நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது. இதை பயன்படுத்தி நிலத்தை உழுது தயார் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இதே நிலையில் தான் மாவட்டத்தின் அனைத்து விவசாயிகளும் உள்ளனர். இவ்வாறு கூறினார்.

## <u>தொழு உரம் தயாரித்தல் பயிற்சி</u>

முதுகுளத்தூர்;ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல் பயிற்சி முகுளத்தூர் அருகே விளங்குளத்தூர், வெங்கலகுறிச்சியில் நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர்கள் முத்துவேல் (விளங்குளத்தூர்), சுதா (வெங்கலகுறிச்சி) முன்னிலை வகித்தனர். உதவி இயக்குனர் பேசுகையில், ""தக்கைப்பூண்டு பயிரிடுவதால், கால்நடை தீவனம் குறைந்த முதலீட்டில் கிடைக்கும். மண் வளம் பாதுகாக்கபட்டு, பயிர் உற்பத்தி அதிகரிக்கும். தொழுஉரம் தயாரிக்க நிழல் உள்ள பகுதியை தேர்வு செய்து, மக்கிய தொழு உரம், பாஸ்பேட் சிறிதளவு நீர்விட்டு கிளறியபின், காற்றுப்புகாமல் பாலிதீன் அல்லது தார்ப்பாய் கொண்டு மூட வேண்டும். 15 நாட்களுக்கு ஒரு முறை கிளறி விட்டு, 45 நாட்களில் உரமேற்றிய தொழு உரம் பெறலாம்,"என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**கோமாரி நோயை கட்டுப்படுத்த கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம் 21 நாட்கள் நடக்கிறது**

தர்மபுரி மாவட்டத்தில் கோமாரி நோயை கட்டுப்படுத்த 21 நாட்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்கள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் விவேகானந்தன் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்பு கூட்டம்

தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் தீவிர கோமாரி நோய் தடுப்பூசி திட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சங்கர், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள், உதவி வன பாதுகாவலர் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள் மற்றும் ஆவின் கிராம அளவிலான பணியாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலெக்டர் பேநுசுகையில், தர்மபுரி மாவட்டத்தில் 3 லட்சத்து 59 ஆயிரத்து 62 மாடு மற்றும் எருமையினங்கள் உள்ளன. கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இதனை தடுக்க வருகிற 1-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

விழிப்புணர்வு

இந்த காலக்கட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து மாவட்டத்தில் உள்ள அனைத்து பசு மற்றும் எருமை இனங்களுக்கு எவ்வித விடுபாடின்றி 100 சதவீதம் தடுப்பூசி போட வேண்டும். இதுதொடர்பாக கிராமப்புற விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அதன்படி இன்று (வெள்ளிகிழமை) நடைபெற உள்ள கிராமசபை கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையினர் கலந்து கொண்டு கோமாரிநோய் தடுப்பூசியின் முக்கியத்துவம் மற்றும் தடுப்பூசி போடுவதின் அவசியம் குறித்து விளக்கி கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.எகவே அனைத்து கால்நடை வளர்க்கும் விவசாயிகளும் இந்த

கிராமசபை கூட்டத்தில் கலந்து கொண்டு கோமாரி நாய் தடுப்பூசியின் முக்கியத்தை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

**<u>பவானிசாகர் அணை திறக்கப்பட்டது கலெக்டர், எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்பு</u>**

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்துக்காக நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதில் கலெக்டர் சண்முகம், எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்றனர்.

பவானிசாகர் அணை

தமிழகத்தின் 2-வது பெரிய அணை என்ற பெருமை கொண்டது ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அணை. இந்த அணையில் இருந்து வெளிவரும் கீழ்பவானி வாய்க்கால் மூலம் ஈரோடு மற்றும் கரூர், திருப்பூர் மாவட்டங்களில் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. கடந்த 2 மாதங்களுக்கு முன் அணையின் நீர்மட்டம் 44 அடியாக இருந்தது. இதனால் அணையில் மீன்பிடிக்கும் தொழில் மற்றும் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினை வந்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் நீலகிரி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் பவானிசாகர் அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதைத்தொடர்ந்து அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து 76 அடியை எட்டியது.

தண்ணீர் திறப்பு

இந்த நிலையில் பவானிசாகர் அணையில் இருந்து இரட்டை படை மதகுகளுக்கும், சென்னசமுத்திரம் கிளை வாய்க்காலின் ஒற்றைபடை மதகுகளுக்கும் நன்செய் பாசனத்துக்காக தண்ணீர் திறக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து பவானிசாகர் அணையில் நேற்று மதியம் 12.30 மணி அளவில் ஈரோடு மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம் மதகுகளின் பொத்தானை அழுத்தி கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிட்டார். அப்போது அணை தண்ணீர் சீறிப்பாய்ந்து சென்றது. அந்த தண்ணீரை விவசாயிகள் மலர் தூவி வரவேற்றனர். இந்த தண்ணீர் மூலம் கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய்

மற்றும் நீட்டிப்பு கால்வாய் இரட்டைபடை மதகுகள் மூலமாகவும், சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும் மொத்தம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது. 2,300 கனஅடியாக அதிகரிக்கப்படும் வினாடிக்கு 500 கனஅடியாக திறக்கப்பட்ட தண்ணீர் படிப்படியாக வினாடிக்கு 2 ஆயிரத்து 300 கனஅடி வரை அதிகரிக்கப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று அணையின் நீர்மட்டம் 76.58 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,970 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையின் இருந்து பவானி ஆற்றில் வினாடிக்கு 1250 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 23-ந் தேதி முதல் டிசம்பர் 24-ந் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் எஸ்.ஆர்.செல்வம், முன்னாள் எம்.பி., காளியப்பன், ஈரோடு எம்.பி. செல்வகுமார சின்னையன், எம்.எல்.ஏ.க்கள் பி.எல்.சுந்தரம் (பவானிசாகர்), எஸ்.எஸ்.ரமணீதரன் (அந்தியூர்), பி.ஜி.நாராயணன் (பவானி), ஆர்.என்.கிட்டுசாமி (மொடக்குறிச்சி), முன்னாள் எம்.எல்.ஏ. ஏ.டி.சரஸ்வதி, பவானிசாகர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் வி.ஏ.பழனிச்சாமி, சத்தியமங்கலம் ஊராட்சி குழு தலைவர் சுப்புலட்சுமி அய்யாசாமி, பவானிசாகர் பேரூராட்சி தலைவர் வெங்கடாசலம், துணை தலைவர் செல்வம், அரியப்பம்பாளையம் பேரூராட்சி தலைவர் பி.ஆர்.துரைசாமி, மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் சதுமுகை ஆறுமுகம், ஈரோடு ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி, சத்தியமங்கலம் தெற்கு ஒன்றிய செயலாளர் சி.கே.மாரப்பன், பொதுப்பணித்துறை கோவை மண்டல தலைமை பொறியாளர் தமிழரசன், ஈரோடு கண்காணிப்பு பொறியாளர் ஏ.வெங்கடாசலம், ஈரோடு செயற்பொறியாளர் வி.ராஜு, பவானிசாகர் செயற்பொறியாளர் நடராஜன், கோபி ஆர்.டி.ஒ. காமாட்சிகணேசன், சத்தியமங்கலம் தாசில்தார் எம்.சேதுராஜ் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் திரளாக கலந்துகொண்டனர்.

**தஞ்சையில் வெண்பட்டு தொழில் குறித்த விழிப்புணர்வு முகாம் கலெக்டர் சுப்பையன் தொடங்கி வைத்தார்**

தஞ்சையில் வெண்பட்டு தொழில் குறித்த விழிப்புணர்வு முகாமை கலெக்டர்

சுப்பையன் தொடங்கி வைத்தார்.

<u>விழிப்புணர்வு முகாம்</u>

தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் திருச்சி ஆராய்ச்சி விரிவாக்க மையம் மற்றும் மத்திய பட்டு வாரியம் இணைந்து வெண்பட்டுத் தொழில் குறித்த விழிப்புணர்வு முகாமை நடத்தின. முகாமை கலெக்டர் சுப்பையன் தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தஞ்சைக்கும், பட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. பட்டுப்புடவை தயாரிப்பது மட்டுமல்லாது பட்டு உற்பத்தியிலும், தஞ்சை மாவட்டம் முன்னோடியாக வர வேண்டும். பட்டு வளர்ச்சியில் ஏற்கனவே விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதற்காக மாநில அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. அதிக லாபம் உள்ள இந்த தொழிலை எப்படி செய்யலாம்? என்பதற்கு இந்த விழப்புணர்வு முகாம் பயனுள்ளதாக இருக்கும். மேலும் விவசாயிகள் இதை எப்படி வளர்க்கலாம்? அரசு திட்டங்கள் என்ன? இதில் உள்ள சிரமங்கள் என்ன? எவ்வளவு லாபம் கிடைக்கும்? என்பதை தெரிந்து கொள்வதற்கு முதற்கட்டமாக இந்த முகாம் உதவிகரமாக இருக்கும்.

<u>பணப்பயிர்</u>

விவசாயிகள் நெற்பயிரை மட்டும் நம்பி இருக்காமல் லாபம் தரக்கூடிய பணப்பயிர்கள் வரிசையில் பட்டு வளர்ப்பு தொழிலை செய்தால் அதிக லாபம் பெறலாம். பட்டு வளர்ப்போடு பட்டுப்புடவைக்கு பெயர் போன தஞ்சாவூருக்கும் பட்டு நெசவுதொழிலுக்கும் உதவிகரமாக இருக்கும். விவசாயிகள் பொதுவாக பணப்பயிர் ஒன்றையும் சேர்த்து விவசாயம் செய்ய வேண்டும். அந்த வகையில் பட்டு வளர்ப்பு தொழில் செய்வதற்கு தேவையான தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதற்கு பட்டு வளர்ச்சித்துறை தயாராக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

<u>உபகரணங்கள்</u>

முகாமில் 9 விவசாயிகளுக்கு வெண்பட்டு தொழில் செய்ய மானிய தொகையுடன் கூடிய கடனுதவியும் மற்றும் கம்பரசர் பவர் ஸ்பிரேயர், அறுவடை எந்திரம், குளிரூட்டும் எந்திரம், ஹைக்ரோமீட்டா, நெற்றிகால்-135 ஆகிய உபகரணங்களை கலெக்டர் வழங்கினார். முகாமில் திருச்சி மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானி செல்வராஜ், சேலம் பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் சிக்கன்னா, திருச்சி பட்டு வளர்ச்சி மண்டல துணை இயக்குனர் ஜான் எகில்சன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை)

சொக்கலிங்கம், பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் மல்லிகா, மண்டல பட்டு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி மேரி புளோரா, மகிபா ஹெலன், நடராஜன், ரமேஷ், நாஞ்சிக்கோட்டை அரசு பட்டு பண்ணை ஆய்வாளர் அருள்மொழி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.